**வணக்கம்**

**ஆகாஷ்வாணி-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் : நாராயணசாமி**

தேதி : 21.07.2026 – செவ்வாய்க்கிழமை நேரம் : மாலை 6.10 மணி

----------------------------------------------------------------------------------------------------

***தலைப்புச் செய்திகள்***

எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, இன்று நாடாளுமன்ற இரு அவைகளும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

எதிர்காலத் தேர்வுகளில் வினாத்தாள் கசிவைத் தடுக்க அனைத்துத் தரப்பினரின் ஒருங்கிணைந்த முயற்சி தேவை என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சிறு உணவு பதனீட்டு நிறுவனங்களுக்கான, PM-FME திட்டத்தினால், நாட்டில் ஊரகப் பொருளாதாரம் வலுப்பெற்று வருகிறது.

புதுச்சேரியில், செவாலியே சிவாஜி கணேசன் நினைவு நாள், அரசு சார்பில் இன்று அனுசரிக்கப் பட்டது.

***நாடாளுமன்றம் (6)***

நீட் வினாத்தாள் முன்கூட்டியே வெளியான விவகாரம் உட்பட பல்வேறு பிரச்சனைகள் தொடர்பாக, இன்று நாடாளுமன்றத்தில் எதிர்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால், இரு அவைகளும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன. 2ஆவது ஒத்தி வைப்பிற்குப் பின்னர், பிற்பகல் 2 மணிக்கு, அலுவல்கள் மீண்டும் தொடங்கிய சமயத்திலும், அமளி நீடித்ததால், அவையின் இன்றைய அலுவல்கள் ஒத்தி வைக்கப்பட்டன.

***மோடி-1 (4)***

எதிர்காலத் தேர்வுகளில், வினாத்தாள் முன்கூட்டியே வெளியாவதைத் தடுக்க, சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினரும் இணைந்து கூட்டு

முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். இது குறித்து கூடுதல் விவரங்கள்…

*மோடி-2 (18)*

நீட் வினாத்தாள் முன்கூட்டியே வெளியான விவகாரத்தில், தவறு செய்தவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கவும், இந்திய இளைஞர்களின் நலன்களை பாதுகாக்கவும் அரசு உறுதி பூண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார். நீட் வினாத்தாள் விவகாரத்தில், குற்றம்சாட்டப்பட்ட 13 பேர் ஏற்கனவே சிறையில் அடைக்கப் பட்டுள்ளதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார். இன்று நாடாளுமன்ற வளாகத்தில், தேசிய ஜனநாயக கூட்டணியின் **மங்கள் மிலன் –** நாடாளுமன்ற குழுவின் கூட்டத்தில் பேசுகையில், அவர் இவ்வாறு கூறினார்.

பல்வேறு நாடுகளுக்கும் – இந்தியாவிற்கும் இடையிலான வரியில்லா வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்து பிரதமர் இக்கூட்டத்தில் பேசுகையில், இத்தகைய ஒப்பந்தங்களில், இந்திய விவசாயிகளின் நலன்களுக்கும், இந்தியாவின் தேசிய நலன்களுக்கும் உயர் முன்னுரிமை அளிக்கப் படுவதாக தெரிவித்தார்.

நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜிஜு பின்னர் செய்தியாளர்களிடம், இத்தகவல்களை வெளியிட்டார். நாட்டிலேயே நீண்ட காலம் பதவியில் உள்ள பிரதமராக மேம்பட்டுள்ள பிரதமர் திரு. நரேந்திர மோடிக்கு வாழ்த்து தெரிவிக்கும் தீர்மானமும், இன்று, தேசிய ஜனநாயக கூட்டணியின் நாடாளுமன்றக் கூட்டத்தில் நிறைவேற்றப் பட்டது.

*ரஷ்யா (11)*

கடந்த 19ஆம் தேதி கருங்கடல் பகுதியில், MV Golden Leo வர்த்தக கப்பல் தாக்கப்பட்டதில், 4 இந்திய மாலுமிகள் உயிரிழந்தது குறித்து, இந்தியா, இன்று ரஷ்ய தூதர் திரு. விளாடிமிர் லாடனோவை நேரில் வரவழைத்து, கடும் கவலை மற்றும் துயரம் வெளியிட்டது. வர்த்தக கப்பல்கள் தாக்கப் படுவதும், இதனால் அப்பாவி சிவிலியன்கள் உயிரிழப்பதும், ஏற்கத் தக்கது அல்ல என்பதால், இது குறித்த இந்தியாவின் கவலைகளை ரஷ்ய அதிகாரிகளிடம் எடுத்துக் கூறி, இத்தகைய

சம்பவங்களை தவிர்க்க ரஷ்ய தூதரிடம் கேட்டுக் கொள்ளப்பட்டதாக, வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது. இத்தகைய சம்பவங்களால், சர்வதேச கடல்சார் வர்த்தகத்தில் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மை பாதிக்கப் படுவதையும், அமைச்சகம் சுட்டிக்காட்டி உள்ளது.

***சிக்கிம் (13)***

சிக்கிம் மாநிலம் நாம்ச்சி மாவட்டத்தில், தீஸ்ட்டா நீர் மின்சாரத் திட்டத்திற்கான சுரங்கப் பணிகளின் போது, நிலச்சரிவினால் ஏற்பட்ட இடுபாடுகளில் சிக்கியுள்ள தொழிலாளர்களை மீட்கும் பணிகள், தீவிரமாக்கப் பட்டுள்ளன. இதுவரை 11 சடலங்கள் மீட்கப் பட்டுள்ளதாக, மீட்புப் படையினர் தெரிவித்துள்ளனர். மேலும் 25 பேர் இடுபாடுகளில் சிக்கி இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. நிலவரங்கள் குறித்து, பிரதமர் திரு. நரேந்திர மோடி, இன்று, சிக்கிம் முதலமைச்சர் திரு. பிரேம் சிங் தமங்-கை தொடர்பு கொண்டு பேசினார். தேவையான எல்லா உதவிகளையும் மத்திய அரசு வழங்கும் என அவர் உறுதியளித்தார். சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து, தலா 2 லட்சம் ரூபாய் கருணைத் தொகை வழங்கப்படும் என பிரதமர் அறிவித்துள்ளார். காயமடைந்தவர்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் நிவாரணம் அறிவிக்கப் பட்டுள்ளது.

***உத்ராகண்ட் (8)***

உத்ராகண்ட்டில் மழை மற்றும் நிலச்சரிவு அபாயத்தினால் நிறுத்தி வைக்கப்பட்ட சார்தாம் யாத்திரை , ஒருநாள் இடைவெளிக்குப் பின்னர் இன்று மீண்டும் தொடங்கி உள்ளது. யாத்திரைப் பாதையில், நிலச்சரிவு மற்றும் இதர காரணங்களால் தடை ஏற்பட்டால், பயணிகள், அரசால் பரிந்துரைக்கப் படும் பத்திரமான இடங்களில் தங்கியிருந்து, தடை நீங்கிய பின்னர், யாத்திரையைத் தொடர அறிவுறுத்தப் பட்டுள்ளது. யாத்ரீகர்களின் பாதுகாப்பே அரசின் முக்கிய முன்னுரிமை என்றும், உத்ராகண்ட் அரசு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

***ஹிமாச்சல் (7)***

ஹிமாச்சலப் பிரதேசத்தில், கனமழை காரணமாக, ஜால்னா கால்வாயில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தில், சாலைகள் அடித்துச் செல்லப்பட்டதால், லாஹால் உள்ளிட்ட மாவட்டங்களில் போக்குவரத்து தடைபட்டுள்ளது. 5ஆம் எண் தேசிய நெடுஞ்சாலையில், நிலச்சரிவு ஏற்பட்டதால், கின்னார் மாவட்டத்தில், ஷல்கார் – சும்டோ இடையே போக்குவரத்து பாதிக்கப் பட்டது. சம்பா மாவட்டத்தின் பழங்குடி பகுதியில், நேற்று இரவு கனமழையால் பாதிக்கப்பட்ட 20 பேரை மீட்புப் படையினர் பத்திரமாக மீட்டுள்ளனர்.

***ஜம்மு – காஷ்மீர் (5)***

ஜம்மு – காஷ்மீரில், தொடர் மழையால் போக்குவரத்து பாதிக்கப்பட்ட, ஜம்மு – ஸ்ரீநகர் தேசிய நெடுஞ்சாலையில், பல்வேறு இடங்களில் சாலை சீரமைப்புப் பணிகள், தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தேசிய நெடுஞ்சாலைகள் ஆணையம் மற்றும் சம்பந்தப்பட்ட இதர அமைப்பினர் இணைந்து, மண் சரிவை அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

***மோடி கட்டுரை-1 (6)***

சிறு அளவிலான உணவு பதனீட்டு நிறுவனங்களை, அமைப்பு ரீதியிலான துறையாக மாற்றுவதற்கான பிரதமரின் PM-FME திட்டத்தினால், நாட்டில் ஊரகப் பொருளாதாரம் வலுவடைந்து வருகிறது. இத்திட்டம் குறித்து மத்திய உணவு பதனீட்டுத் துறை அமைச்சர் திரு. சிராக் பாஸ்வான் எழுதியுள்ள கட்டுரை ஒன்றை, பிரதமர் திரு. நரேந்திர மோடி, சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். இது குறித்து கூடுதல் விவரங்கள்…

***மோடி கட்டுரை-2 (11)***

பிரதமரின் PM-FME திட்டத்தினால், சிறு உணவு பதனீட்டு திட்டத்தின் கீழ், சிறு அளவிலான உணவு பதனீட்டு நிறுவனங்களுக்கு, நிதி ஆதரவு, தொழில்நுட்ப உதவி மற்றும் புதிய சந்தை வாய்ப்புகள் கிடைத்து வருகின்றன. சுயசார்பு இந்தியாவை உருவாக்க ஏதுவாக, ஊரகப் பொருளாதாரத்தை வலுப்படுத்துவதில், இத்திட்டம் முக்கிய பங்காற்றி வருவதாக, பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தினால், கிராமப்புறங்களில் குறிப்பாக பெண்களிடையே தொழில் முனைப்பு அதிகரித்து வருவதாகவும் அவர் கூறியுள்ளார். PM-FME திட்டத்தின் கீழ், இதுவரை 2 லட்சத்திற்கும் மேற்பட்ட கடன்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டு, முக்கிய மைல் கல் எட்டப்பட்டு உள்ளதாக, அமைச்சர் திரு. பாஸ்வான் தமது கட்டுரையில் கூறியுள்ளார்.

***ஜவுளி (8)***

கடந்த நிதியாண்டில், இந்தியாவின் ஜவுளித் துறை ஏற்றுமதி, உலக அளவிலான புவி – அரசியல் பிரச்சனைகளுக்கு இடையிலும், 3 லட்சத்து 25 ஆயிரம் கோடி ரூபாயாக, 1.8 சதவிகிதம் அதிகரித்து உள்ளது. மத்திய ஜவுளித் துறை அமைச்சர் திரு. கிரிராஜ் சிங், இன்று மக்களவையில் எழுத்துப் பூர்வமான பதில் ஒன்றில் இதைத் தெரிவித்தார். இந்திய ஜவுளி மற்றும் ஆடை உற்பத்தித் துறையின் போட்டித் திறனை உலக அளவில் உயர்த்த, PM-மித்ரா உட்பட பல்வேறு திட்டங்கள் மற்றும் முன் முயற்சிகளை அரசு அமல்படுத்தி இருப்பதாக அவர் கூறினார்.

***எரிசக்தி (10)***

புதுப்பிக்கவல்ல எரிசக்தி ஆதாரங்கள் மூலமான இந்தியாவின் மின்சார உற்பத்தித் திறன், 2014ஆம் ஆண்டில், 76 கிகா வாட்டாக இருந்த அளவில் இருந்து, தற்போது 288 கிகா வாட்டாக அதிகரித்து உள்ளது. புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறைக்கான மத்திய இணையமைச்சர் திரு. ஸ்ரீபத் யெஸ்ஸோ நாயக் இன்று மாநிலங்களவையில் எழுத்து மூலமான பதில் ஒன்றில் இதை தெரிவித்தார். இந்தியாவில் தற்போது, சூரிய சக்தி மூலமான 162 கிகா வாட் மின்சார உற்பத்தித் திறனும், காற்று விசை மூலமான 58 கிகா வாட் மின்சார உற்பத்தித் திறனும் உள்ளதாக அவர் கூறினார். இத்துறையில், சுமார் 46 பில்லியன் டாலர் அளவிற்கு, நேரடி அன்னிய முதலீடுகள் பெறப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

***மருத்துவம் (7)***

புற்றுநோய் மற்றும் பல்வேறு தொற்று நோய்களுக்கு எதிராக, முற்றிலும் உள்நாட்டிலேயே உருவாக்கப்பட்ட, 2 புதிய, உயிரி-மருத்துவ தொழில்நுட்பங்களை, மருந்து உற்பத்தி நிறுவனங்களின் பயன்பாட்டிற்கு வழங்க, இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் கழகம் நடவடிக்கை எடுத்துள்ளது. மக்கள் பணம் மூலமான ஆராய்ச்சிகளின் பலன்களை, மக்களுக்கான மருத்துவ தீர்வுகளாக மாற்றுவதில் இது ஓர் முக்கிய நடவடிக்கை என்று, ICMR தலைமை இயக்குநர் டாக்டர் ராஜீவ் பஹல் கூறியுள்ளார்.

***புதுச்சேரி – சிவாஜி (6)***

புதுச்சேரியில், செவாலியே சிவாஜி கணேசன் நினைவு நாள், அரசு சார்பில் இன்று அனுசரிக்கப் பட்டது. கிழக்கு கடற்கரைச் சாலை – கருவடிக்குப்பம் சாலை சந்திப்பில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு, அமைச்சர் திரு. ராஜவேலு, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. வையாபுரி மணிகண்டன், திரு. மோகன்தாஸ், திரு. செந்தில் என்கிற ரமேஷ் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

***ஏனாம் (5)***

மத்திய தொழில் வர்த்தக அமைச்சகத்தின் கடல் பொருள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம், நீடித்த மீன் வளர்ப்புக்கான தேசிய மையத்துடன் இணைந்து, ஏனாமில் இன்றுமுதல் 3 நாட்களுக்கு அட்டவணை பிரிவு விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் ஒன்றை நடத்துகிறது. மீன்வளத் துறை துணை இயக்குநர் திரு. மீரா சாஹிப் இம்முகாமை தொடக்கி வைத்தார்.

***வானிலை (10)***

தமிழக கடலோரப் பகுதிகளில், கீழ்மட்ட வளிமண்டலத்தில், பலவீனமான காற்றழுத்த தாழ்வுப் பாதை நிலவுவதாக, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்று மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில், பலத்த காற்றுடன் மிதமான மழைக்கு வாய்ப்பு இருப்பதாக, வானிலை அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது. புதுச்சேரி – காரைக்கால் பகுதிகளில், இன்று லேசான மழையும், நாளை மிதமான மழையும் எதிர்பார்க்கப் படுகிறது. வரும் 27ஆம் தேதி வரை, மழை நீடிக்கலாம் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. சூறாவளிக் காற்றுக்கு வாய்ப்பு

அதிகம் உள்ள, தமிழக கடலோரப் பகுதிகள், வங்கக் கடல் பகுதிகள் மற்றும் அரபிக் கடல் பகுதிகளுக்கு மீனவர்கள் செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளனர்.

***டெங்கு – தடுப்பூசி (8)***

டெங்கு காய்ச்சலுக்கு எதிரான Q-denga தடுப்பூசியை இந்தியாவில் விற்க, மருந்துகளுக்கான மத்திய அரசின் தரக் கட்டுப்பாட்டு அமைப்பு, ஒப்புதல் அளித்துள்ளது. ஐரோப்பிய யூனியன், இங்கிலாந்து, மலேசியா, தாய்லாந்து உட்பட 42 நாடுகளில் ஏற்கனவே அங்கீகரிக்கப் பட்டுள்ள இந்த தடுப்பூசி, டெங்கு காய்ச்சலுக்கு எதிராக இந்தியாவில் அனுமதிக்கப்படும் முதலாவது தடுப்பு மருந்தாகவும், நாட்டின் பொது சுகாதார முன் முயற்சிகளில், இது முக்கிய மைல் கல்லாகவும் அமைகிறது.

***பேட்மிண்டன் (11)***

**சீன ஓபன்** பேட்மிண்டன் **சாம்பியன் பட்டத் தொடரின்** ஆடவர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் **ஹெச்.எஸ் பிரணாய்** இன்று தொடக்கப் போட்டியில் மலேசிய வீரரிடம் தோல்வி அடைந்து, தொடரில் இருந்து வெளியேறினார். இப்பிரிவில், **லட்சயா சென், ஆயுஷ் ஷெட்டி** ஆகியோரும், இந்தியாவின் சார்பில் இடம் பெற்றுள்ளனர். மகளிர் ஒற்றையர் பிரிவில், இந்தியாவின் பி.வி. சிந்து நாளை, சக வீராங்கனை உன்னதி-யுடன், முதல் சுற்றுப் போட்டியில் மோதுகிறார். இந்தியாவின் சார்பில், **எம்.ஆர். அர்ஜுன் – அம்ச கருணன்** இணை, ஆடவர் இரட்டையர் பிரிவிலும், இடம் பெற்றுள்ளது. கலப்பு இரட்டையர் பிரிவில், **தனிஷா கிராஸ்டோ – துருவ் கபிலா** இணையும் **ரோஹன் கபூர் – ரித்விகா ஷிவானி** இணையும் இடம் பெற்றுள்ளன.

***மீண்டும் தலைப்புச் செய்திகள்***

எதிர்கட்சிகளின் அமளி காரணமாக, இன்று நாடாளுமன்ற இரு அவைகளும் நாள் முழுவதற்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

எதிர்காலத் தேர்வுகளில் வினாத்தாள் கசிவைத் தடுக்க அனைத்துத் தரப்பினரின் ஒருங்கிணைந்த முயற்சி தேவை என, பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சிறு உணவு பதனீட்டு நிறுவனங்களுக்கான, PM-FME திட்டத்தினால், நாட்டில் ஊரகப் பொருளாதாரம் வலுப்பெற்று வருகிறது.

புதுச்சேரியில், செவாலியே சிவாஜி கணேசன் நினைவு நாள், அரசு சார்பில் இன்று அனுசரிக்கப் பட்டது.